வங்கிகளின் ஏ.டி.எம். படிவங்களில் தமிழ்: பழனிவேல் தியாகராஜன் வலியுறுத்தல்

சென்னை, ஜன.25

வங்கிகளின் ஏ.டி.எம். படிவங்களில் தமிழ் பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் நேற்று (24–ந் தேதி) தலைமைச் செயலகத்தில் மாநில வங்கியாளர் குழுவின் சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சரின் அறிவுரையின்படி, நிதித்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், அனைத்து வங்கிகளின் ஏ.டி.எம். படிவங்களில் தமிழ் பயன்படுத்தப்படவேண்டும். மேலும், வங்கியின் உதவி மையங்கள் மற்றும் பொதுமக்களுடன் தொடர்பில் இருக்கும் அலுவலர்கள் தமிழ் நன்கு அறிந்திருக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

பல்வேறு அரசுத் திட்டங்களில் வங்கிகளின் செயல்பாடு குறித்து அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார். முன்னுரிமைத் துறைகளுக்கு கடன் வழங்கும் திட்டங்களை முனைப்பாகச் செயல்படுத்த வேண்டும். குறிப்பாக, ஏழை எளிய மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்கி உதவிட வேண்டும். வங்கி வசதிகள் இல்லாத தொலைதூரப் பகுதிகளில், குறிப்பாக வன மற்றும் பழங்குடியினப் பகுதிகளில் வங்கி வசதிகள் வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

முதல் முறையாக, வரும் 2022–23–ம் நிதியாண்டின் தமிழக நிதிநிலை அறிக்கைக்காக வங்கியாளர்களுடன் கலந்தாலோசித்து, பரிந்துரைகள் பெறப்பட்டன.

இந்த கூட்டத்தில் நிதித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் நா.முருகானந்தம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாண்மை இயக்குநர் பார்த்தா ப்ரதிம் சென்குப்தா, இந்திய ரிசர்வ் வங்கி (சென்னை) மண்டல இயக்குநர் எஸ்.எம்.என்.ஸ்வாமி, நிதித்துறை (செலவினம்) அரசுச் செயலர் வி.அருண்ராய் மற்றும் நிதித்துறை மற்றும் வங்கிகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மருத்துவப் படிப்புக்கான தரவரிசை: அமைச்சர் சுப்பிரமணியன் வெளியிட்டார்

27–ந்தேதி கலந்தாய்வு ஆரம்பம்

சென்னை, ஜன.25

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். போன்ற இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று வெளியிட்டார். இந்த படிப்புகளில் சேருவதற்கான கலந்தாய்வு நாளை மறுதினம் (வியாழக்கிழமை) தொடங்குகிறது.

நாடு முழுவதும் ‘நீட்’ தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ படிப்புகளில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. இந்த படிப்பில் சேருவதற்கான விண்ணப்பங்கள் கடந்த டிசம்பர் 19ந் தேதி தொடங்கி ஜனவரி 7ந் தேதி வரை ‘ஆன்லைன்’ மூலம் பெறப்பட்டன.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள மருத்துவ கல்வி இயக்குனரக அலுவலகத்தில், எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். போன்ற இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை நேற்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார். மேலும் அவர், அரசு ஒதுக்கீடு, நிர்வாக ஒதுக்கீடு பிரிவில் முதல் 10 இடங்களை பிடித்த மாணவ–மாணவிகள் பெயர் பட்டியலையும், முதல் 10 இடங்களை பிடித்த அரசு பள்ளி மாணவ–மாணவிகள் பெயர்களையும் வெளியிட்டார்.

அப்போதுதமிழகஅரசின்மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவ கல்வி இயக்குனர் டாக்டர் நாராயணபாபு, கூடுதல் இயக்குனர் டாக்டர் வசந்தா மணி ஆகியோர் உடன் இருந்தனர்.

பின்னர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

இளநிலை பட்டப்படிப்பில் அரசு மற்றும் சுயநிதி மருத்துவ கல்லூரிகளுக்கான மொத்த இடங்கள் 7,825. அதில் மாநில அரசு மற்றும் சுயநிதி மருத்துவ கல்லூரிகளுக்கான ஒதுக்கீடு 6 ஆயிரத்து 999. அரசு பல் மருத்துவம் மற்றும் சுயநிதி பல் மருத்துவ கல்லூரிகளுக்கான இடங்கள் 1,960. இதில் மாநில அரசு மற்றும் சுயநிதி பல் மருத்துவ கல்லூரிகளுக்கான ஒதுக்கீடு 1,930 ஆகும்.

அரசு ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கைக்கு (பொதுப்பிரிவு) மொத்தம் 25 ஆயிரத்து 595 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் 16 ஆயிரத்து 74 மாணவர்கள், 8 ஆயிரத்து 875 மாணவிகள் என மொத்தம் 24 ஆயிரத்து 949 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதில் 16 ஆயிரத்து 29 மாணவர்கள் மாநில அரசின் பாடத்திட்டத்திலும், 8 ஆயிரத்து 543 மாணவர்கள் மத்திய அரசின் கல்வி திட்டத்தின் (சி.பி.எஸ்.இ.) மூலமாகவும் படித்தவர்கள்.

சுயநிதி கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கு மொத்தம் 15 ஆயிரத்து 259 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் 14 ஆயிரத்து 913 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதில் மாநில அரசின் பாடத்திட்டத்தின் கீழ் 5 ஆயிரத்து 586 பேரும், சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின் கீழ் 7 ஆயிரத்து 106 பேரும் படித்தவர்கள்.

மருத்துவபடிப்பில்மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வருகிற 27ந் தேதியும் (நாளை மறுதினம்), 28, 29ந் தேதிகளில் 7.5 சதவீத இடஒதுக்கீடு அடிப்படையிலான அரசு பள்ளி மாணவர்களுக்கான கலந்தாய்வும் நடைபெற உள்ளது. பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு 30ந் தேதி முதல் ‘ஆன்லைன்’ (*www.tnhealth.tn.gov.in, https://tnmedicalselection.net*) மூலம் தொடங்கி நடைபெற உள்ளது. ‘ஆன்லைன்’ கலந்தாய்வில் பங்கேற்பது எப்படி என்பது குறித்து மாணவ–மாணவிகளின் சந்தேகங்களை தீர்ப்பதற்கு வழிகாட்டு நெறிமுறைகள் அடங்கிய வீடியோ பதிவு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இது விரைவில் வெளியிடப்படும்.

இந்த வழிகாட்டு நெறிமுறை களை படித்து மாணவர்கள் கலந்தாய்வில் கலந்துகொள்ளலாம். ஓமந்தூரார் அரசு பன்னோக்கு ஆஸ்பத்திரி வளாகத்தில் இந்த கலந்தாய்வு நடைபெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழகத்தில் நேற்று 30 ஆயிரத்து 215 பேருக்கு கொரோனா

சென்னை, ஜன.25

தமிழகத்தில் நேற்று 30 ஆயிரத்து 215 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று புதிதாக 1 லட்சத்து 43 ஆயிரத்து 4 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 17,471 ஆண்கள், 12,744 பெண்கள் என மொத்தம் 30 ஆயிரத்து 215 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக சென்னையில் 6,296 பேரும், கோவையில் 3,786 பேரும், செங்கல்பட்டில் 1,742 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்தபட்சமாக பெரம்பலூரில் 107 பேரும், மயிலாடுதுறையில் 88 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் நேற்று வெளிமாநிலங்களில் இருந்து வந்த 7 பேர் உள்பட 12 வயதுக்குட்பட்ட 1,037 குழந்தைகளுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 4,528 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இதுவரை 31 லட்சத்து 64 ஆயிரத்து 205 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதில் 12 வயதுக்கு உட்பட்ட 1 லட்சத்து 18 ஆயிரத்து 627 குழந்தைகளும், 60 வயதுக்கு மேற்பட்ட 4 லட்சத்து 58 ஆயிரத்து 376 முதியவர்களும் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் நேற்றைய நிலவரப்படி 10 ஆயிரத்து 576 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 4 ஆயிரத்து 935 பேர் ஆக்சிஜன் வசதி படுக்கை கொண்ட வார்டுகளிலும், 1,136 தீவிர சிகிச்சை பிரிவிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாவுக்கு தமிழகத்தில் அரசு ஆஸ்பத்திரியில் 21 பேரும், தனியார் ஆஸ்பத்திரியில் 25 பேரும் என 46 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர். தமிழகத்தில் இதுவரை மொத்தம் 37 ஆயிரத்து 264 பேர் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்து உள்ளனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 24 ஆயிரத்து 639 பேர் ‘டிஸ்சார்ஜ்’ செய்யப்பட்டுள்ளனர். இதில் அதிகபட்சமாக சென்னையில் 7,418 பேரும், கோவையில் 2,193 பேரும், செங்கல்பட்டில் 2,142 பேரும் அடங்குவர். இதுவரையில் 29 லட்சத்து 20 ஆயிரத்து 457 பேர் குணம் அடைந்து உள்ளனர். தமிழகத்தில் கொரோனா பாதித்த 2 லட்சத்து 6 ஆயிரத்து 484 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஆன்லைன் மூலம் இ–ஏல முறையில் ஆஸ்தி விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051, கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், எண். 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600 006. (இந்தியா கேரேஜ் மகிந்திரா ஷோரூம் அடுத்து)

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

கேபிடல் பர்ஸ்ட் லிமிடெட் உடன் 28.12.2016 அன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடனை ஒதுக்கியுள்ளது. ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற கடன்தாரரான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு **திரு. சிவகுமார் ஆர்., த/பெ. முத்துசாமி ரங்கசாமி, திருமதி. எஸ். கார்த்திகை செல்வி, க/பெ. திரு. சிவகுமார் ஆர்.,** ஆகியோர் கடன் கணக்கு எண் 325103ன்கீழ் 21.01.2022 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.47,57,581/– (ரூபாய் நாற்பத்தியேழு லட்சத்து ஐம்பத்தியேழாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்று மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய ஒப்பந்த வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் 18.02.2022 அன்று பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். **குறைந்தபட்ச விலை: ரூ.45,00,000/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம் மட்டும்)** மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.4,50,000/– (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 17.02.2022 அன்று மாலை 7.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்தின் விவரம்: சென்னை 600 039, வியாசர்பாடி, சர்மா நகர் ஹவுசிங் போர்டு காலனி, வீட்டு எண்.252ல் (கதவு எண்.252), உள்ள 800 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் மற்றும் 800 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள கீழ்தளம் மற்றும் சிறு துண்டுகளும் அதன்பகுதிகளும் மற்றும் மின் சேவை இணைப்பு எண்.19–10–234 மற்றும் கழிவு நீர் குழாய் மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு டெபாசிட், மாநகராட்சி சொத்து வரி மதிப்பீட்டு எண்.03–035–1297, அதன் சர்வே எண்.766 பகுதி, ஆர்.எஸ்.எண்.766 பகுதி, சர்மா நகர் ஹவுசிங் போர்டு காலனி, வியாசர்பாடி, பெரம்பூர் கிராமம், பெரம்பூர் – புரசைவாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டம், சொத்தின் எல்லைகள் : வடக்கில் 16 அடி சாலை, தெற்கில் 5 அடி சந்து, கிழக்கில் வீட்டு எண்.251 மற்றும் மேற்கில் வீட்டு எண்.253. விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக 2 பக்கமும் : 20 அடி, வடக்கிலிருந்து தெற்காக இரண்டு பக்கமும்: 40 அடி. இந்த சொத்து மத்தி சென்னை, சென்னை பதிவு மாவட்டம் மற்றும் புரசைவாக்கம், சென்னை சார் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. ராஜேந்தர் தாஹியா (+91 8448264515), மற்றும் திரு. சூர்யா பெரியசாமி (+91 9600222111)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் HTTPS://WWW.KOTAK.COM/EN/BANK–AUCTIONS.HTML and/or on HTTPS://BANKAUCTIONS.IN–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை
தேதி : 25–01–2022

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

IDFC

ஐடிஎப்சி லிமிடெட்

CIN: L65191TN1997PLC037415 email: info@idfc.com, Website: www.idfc.com
பதிவு அலுவலகம்: 4வது மாடி, கேபிடல் டவர், 555, அண்ணா சாலை, திருவிக குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018 தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022
கார்பொரேட் அலுவலகம்: 906/907, 9வது மாடி, எம்பசி சென்டர், ஜம்னாலால் பஜாஜ் சாலை, நரிமன் பாயிண்ட், மும்பை 400 021. தொலைபேசி எண்: +91 22 4222 2000; பேக்ஸ் : +91 22 2654 0354

அறிவிப்பு

2015ம் வருடத்திய செக்யூரிட்டீஸ் அண்டு எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், விதி 29(1) மற்றும் விதி 47 (1) (ஏ) ஆகியவற்றின்படி ஐடிஎப்சி லிமிடெட்டின் 160வது இயக்குனர்கள் குழு கூட்டம் **வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 11, 2022** அன்று மும்பையில் இதர அலுவல்களுக்கு இடையே கீழ்க்கண்டவற்றை பரிசீலித்து மற்றும் பதிவு செய்து அங்கீகரிக்க நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

a. டிசம்பர் 31, 2021–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் (தணிக்கையாளர்களின் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வுக்கு உட்பட்டது)

மேற்சொன்ன கூட்ட அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.idfc.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டின் இணைய தளம் www.bseindia.com ஆகியவற்றில் கிடைக்கும்.

ஐடிஎப்சி லிமிடெட்டுக்காக
ஒப்பம்/
மகேந்திரா N. ஷா
கம்பெனி செயலாளர்

இடம்: மும்பை
தேதி : ஜனவரி 24, 2022

கொரோனா தொற்று எதிரொலி

பட்ஜெட் கூட்டத்தொடரில் வெவ்வேறு நேரத்தில் மக்களவை, மாநிலங்களவை கூடும்

புதுடெல்லி, ஜன.25

கொரோனா சூழலை கருத்தில் கொண்டு பட்ஜெட் முதலாவது கூட்டத்தொடரில் வெவ்வேறு நேரங்களில் மக்களவையும், மாநிலங்களவையும் கூடுகின்றன.

வருகிற 31ந்தேதி நடப்பு ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்குகிறது. இதில், கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றும்விதமாக மக்களவையும், மாநிலங்களவையும் தலா 5 மணி நேரத்துக்கு வெவ்வேறு நேரங்களில் கூடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் பிப்ரவரி 1ந்தேதி அன்று காலை 11 மணிக்கு மக்களவை கூடும். பிப்ரவரி 2ந்தேதியில் இருந்து, பட்ஜெட் கூட்டத்தொடரின் முதலாவது பகுதி முடிவடையும் 11ந்தேதி வரை, பிற்பகல் 4 மணி முதல் இரவு 9 மணி வரை மக்களவை கூடும்.

தற்போதைய கொரோனா சூழலை கருத்தில்கொண்டு, மக்களவை நடைபெறும்போது, மக்களவை மற்றும் மாநிலங்களவை அறைகளும், அவற்றின் கேலரிகளும் உறுப்பினர்கள் அமர்வதற்கு பயன்படுத்தப்படும் என்று மக்களவை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட் கூட்டத்தொடர் முதலாவது பகுதிக்கான மாநிலங்களவை நேரம் இன்னும் முறைப்படி அறிவிக்கப்படவில்லை. ஆனால் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மாநிலங்களவை கூடக்கூடும் என்று கூறப்படுகிறது.

இம்மாதம் 31ந்தேதி, இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் உரையாற்றுவார்.

பட்ஜெட் கூட்டத்தொடரின் 2வது பகுதி, மார்ச் 14ந்தேதி முதல் ஏப்ரல் 8ந்தேதி வரை நடைபெறும். ஆனால் அதற்கான இரு அவை நேரங்களும் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

கவர்னர் மாளிகையில் குடியரசு தின விருந்து நிகழ்ச்சி ஒத்திவைப்பு

சென்னை, ஜன.25

தமிழக கவர்னர் மாளிகை சார்பில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:

கிண்டி ராஜ்பவனில் 26ந்தேதி அன்று விருந்து உபசரிப்பு நிகழ்ச்சி, கொரோனா பரவலை கருத்தில் கொண்டு ஒத்திவைக்கப்படுகிறது. இயல்புநிலை திரும்பியவுடன் சூழ்நிலைக்கு ஏற்ப விருந்து நிகழ்ச்சி நடத்தப்படும். தமிழக மக்கள் கொரோனா பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளையும், அரசின் அறிவுறுத்தல்களையும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்று கவர்னர் ஆர்.என்.ரவி வலியுறுத்தி உள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பொது அறிவிப்பு

சென்னை – 600 125, மணப்பாக்கம், ரிவர் வியு காலனி, 3வது பிரதான சாலை மனை எண்.6ல் வசிக்கும் திரு.லலித் மோகன் ஓஜா ஆகிய எனது கட்சிக்காரர் தெரிவிப்பதாவது,

மேற்படி எனது கட்சிக்காரர் கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தாலுக்கா, வடவள்ளி கிராமம, சர்வே எண். 514/1B1 மற்றும் சர்வே எண். 515/1ல் அமைந்துள்ள மனை எண்.50 என்ற சொத்திற்கு சொந்தக்காரர் ஆவார். மேற்படி சொத்தை எனது கட்சிக்காரர் 27.11.1992 தேதியிட்ட கோயம்புத்தூர் இணை 2 சார் பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட ஆவண எண். 1702/1992 கொண்ட விக்கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெறறார்.

மேற்படி பத்திரத்தை எனது கட்சிக்காரர் தனது வீட்டில் வைத்திருந்தார். மேற்படி ஆவணம் 2015–ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த வெள்ளப்பெருக்கில் காணாமல் போனது.

ஆகவே இந்த பொது அறிவிப்பு மூலம் பொதுமக்களை கேட்டுக்கொள்வதாவது மேற்படி ஆவணத்தை யாராவது கண்டெடுத்தாலோ அல்லது வைத்திருந்தாலோ அடியிற்கண்ட முகவரிக்கோ அல்லது எனது கட்சிக்காரருக்கோ இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தெரியப்படுத்தவேண்டியது.

T.S.G. சேகர்
வழக்கறிஞர்
சைதை வழக்கறிஞர்கள் சங்கம், சைதை நீதிமன்ற வளாகம்
சைதாப்பேட்டை சென்னை 600 015.
கைபேசி :94440 80633

13-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

A.P. முத்துசாமி I.A.S.

தோற்றம்: 01-06-1941 **மறைவு: 25-01-2009**

தமிழ்நாடு முன்னாள் தலைமை செயலாளர் (ஓய்வு)

"என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்"

மனைவி : விஜயலட்சுமி முத்துசாமி
மகன்கள் : M.குமரன் ராஜேஷ்
M.குமார்
மகள் : A.மீனாட்சி
மருமகன் : ஆனந்த் பால்பாண்டியன்
மருமகள்கள் : ஹேமாவதி விதுபாலா

கொரோனா பரவல் காரணமாக நாளை கிராம சபை கூட்டம் நடத்த தமிழக அரசு தடை

சென்னை, ஜன.25

தமிழகம் முழுவதும் கிராம சபை கூட்டம் நடத்த தடை விதித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

ஆண்டுதோறும் குடியரசு தினம், மே தினம், காந்தி ஜெயந்தி மற்றும் சுதந்திர தினம் என 4 நாட்கள் இந்த கூட்டம் நடத்தப்படுவது வழக்கம். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து கிராம சபை கூட்டத்திற்கு பார்வையாளர் ஒருவர் பங்கேற்பார்.

பஞ்சாயத்து தலைவர் தலைமையில் நடக்கும் கிராம சபை கூட்டத்தில் பஞ்சாயத்து கவுன்சிலர்களும், ஊர் பொதுமக்களும் பங்கேற்று தங்களது கோரிக்கைகள் தொடர்பாக தீர்மானங்களை நிறைவேற்றி அரசின் கவனத்திற்கு அனுப்பி வைப்பது வழக்கம்.

இந்த நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனர் பிரவீன் பி.நாயர் அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:

குடியரசு தினமான 26ந்தேதியன்று (நாளை) கிராம சபை கூட்டங்களை நடத்த வேண்டாம். மாநிலத்தில் நிலவும் கொரோனா தொற்றின் நிலையின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

எனவே கிராம பஞ்சாயத்துகளுக்கு மாவட்ட கலெக்டர்கள் தேவையான உத்தரவுகளை பிறப்பித்து, கிராம சபை கூட்டங்களை நடத்த வேண்டாம் என்று கேட்டுகொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

SHRIRAM Transport Finance Company Limited
A WINNING RELATIONSHIP

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

CIN: L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: ஸ்ரீசாய் டவர்ஸ், 14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032, தமிழ்நாடு.
Tel No: +91 44 4852 4666, Fax: +91 44 4852 5666. Website: www.stfc.in, email: secretarial@stfc.in

டிசம்பர் 31, 2021ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்

₹ கோடியில்

வ. எண்.	விவரங்கள்	தனியானது				ஒருங்கிணைந்தது			
		முடிந்த காலாண்டு	முடிந்த ஒன்பது மாதங்கள்	முடிந்த காலாண்டு	முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு	முடிந்த ஒன்பது மாதங்கள்	முடிந்த காலாண்டு	முடிந்த ஆண்டு
		31.12.2021 தணிக்கை செய்யாதது	31.12.2021 தணிக்கை செய்யாதது	31.12.2020 தணிக்கை செய்யாதது	31.03.2021 தணிக்கை செய்தது	31.12.2021 தணிக்கை செய்யாதது	31.12.2021 தணிக்கை செய்யாதது	31.12.2020 தணிக்கை செய்யாதது	31.03.2021 தணிக்கை செய்தது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	4,828	14,174	4,438	17,420	4,828	14,174	4,438	17,420
2	காலத்திற்கான நிகர லாபம் (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	923	2,199	989	3,278	923	2,199	989	3,278
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	923	2,199	989	3,278	923	2,199	989	3,278
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	681	1,622	728	2,487	681	1,622	728	2,487
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	718	1,639	787	2,394	724	1,647	793	2,406
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	271	271	253	253	271	271	253	253
7	இருப்புகள் (மறுமதிப்பீட்டு இருப்பு நீங்கலாக)	25,040	25,040	20,694	21,315	25,197	25,197	20,841	21,464
8	பத்திரங்களின் பிரீமியம் கணக்கு	5,662	5,662	3,201	3,201	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
9	நிகர மதிப்பு	25,283	25,283	20,920	21,541	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
10	செலுத்தப்பட்ட கடன் மூலதனம்/ நிலுவையில் உள்ள கடன்	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
11	நிலுவையில் உள்ள மீட்டெடுக்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள்	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
12	கடன் பங்கு விகிதம்	4.45	4.45	4.60	4.92	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
13	ஒரு பங்கு சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன் மற்றும் பின்) (ஒவ்வொன்றும் ₹10/–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு) அடிப்படை (₹) பலமிழந்தது (₹)	25.26 25.26	61.26 61.26	29.54 29.54	100.97 100.97	25.59 25.59	61.57 61.57	29.80 29.80	101.44 101.44
14	மூலதன மீட்பு இருப்பு	54	54	54	54	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
15	கடன் பத்திர மீட்பு இருப்பு	921	921	610	921	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
16	கடன் சேவை கவரேஜ் விகிதம்	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது
17	வட்டி சேவை கவரேஜ் விகிதம்	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது	பொருந்தாது

குறிப்பு:
செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகளின், விதி 33 மற்றும் 52ன் கீழ் மேற்கண்ட காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்க விவரம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதி 52(4) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிற வரி உருப்படிகள் தொடர்பான தொடர்புடைய வெளிப்பாடுகளின்படி, காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் www.bseindia.com, www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணைய தளம் www.stfc.in ஆகியவற்றில் உள்ளது.

குழுவின் ஆணைப்படி
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக
உமேஷ் ரெவாங்கர்
துணைத் தலைவர் & நிர்வாக இயக்குனர்
DIN : 00141189

இடம்: மும்பை
தேதி : ஜனவரி 24, 2022